SEND IN YOUR NEWS TO
THE EDITOR
THE MORNING STAR
NO: 39, FUSSELS LANE,
COLOMBO - 06,
SRI LANKA.

# THE MORNING STAR

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*
*Established 1841. A Christian Fortnightly Published Every other Friday*
**Vol. 164 - Jaffna - Friday 28th January 2005 No.02**
*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people*

**THE MORNING STAR:**

| | |
|---|---|
| Annual Subscription - foreign | $ 10.00 |
| Life Subscription Foreign | $ 100.00 |
| Annual Subscription Local | Rs. 100.00 |
| Life Subscription - Local | Rs.1000.00 |

THE MORNING STAR
NO: 39, FUSSELS LANE,
COLOMBO - 06,
SRI LANKA.

## Students act to aid those hurt by natural disaster



Hunter Phillips, right, points to Sri Lanka, one of many Asian nations devastated by a tsunami last month. Phillips and classmate Shade Hagar, left, raised over$1,700 to aid tsunami victims in Sri Lanka. The two are fourth-graders at West Woodland Elementary School.

By Dean Wong

Watching the television news and seeing all the suffering in the South Asian countries where 147,000 people were killed by a tsunami make fourth – grader Shade Hagar sad.

He decided to do something to help out the people he had seen on the news and teamed up with Hunter Phillips to raise money at West Woodland Elementary School.

They posted signs around the school to get the word out. A first-grade class offered to do a bake sale.

As of last Friday, the students raised $1,727 to help the victims of the tsunami in Sri Lanka, where 30,000 people died.

"My mom gave me the idea. She was crying while watching television. I felt like I wanted to help them," Hagar said.

"It made me kind of sad. It really affected some people's lives. I had not seen anything like that," said Phillips.

The custodian at West Woodland last year was Chatura Wijenayake, who is originally from Sri Lanka.

Wijenayake asked the students to donate the money to "Tsunami Help Sri Lanka," through an account at Washington Mutual Bank. All the money goes to helping the victims.

Wijenayake said what the students are doing is wonderful and appreciates what people in this country are doing to help.

Wijenayake's father Don Hettiarachchige is also a Seattle School District custodian and is occasionally assigned to West Woodland.

"My immediate family is OK. My dad's hometown is gone. It was badly hit. I have some relatives on my dad's side who are missing," said Wijenayake, who plans on going home in February.

"We handed out envelopes for tsunami victims. I felt like it was important. It made me feel sad," said Hagar.

West Woodland Principal Ed James said he was not surprised by his students' interest in helping people on the other side of the world.

"I was pleased they were thinking of others at a time like this. It affects us all," said James.

James said he's proud of his students for doing what they did.

Hagar started the fund-raising project because of the dire situation for people in countries like Indonesia, Sri Lanka, Sumatra, India and other South Asian and East African nations.

"I wanted to raise money so people there can have supplies and rebuild their cities," Hagar said.

"It's really hard time now. I will go back to see how they are doing. Right now it's a big mess down there," said Wijenayake.

Anyone wishing to make donation to help tsunami victims in Sri Lanka can do so at Washington Mutual Bank's "Tsunami Help Sri Lanka," account No. 1800383729.

"It's heartbreaking. You would think a world away would not affect you, but a world away it does," said James.

## RELIGIOUS OBSERVENEOUS IN MEMORY OF TSUNAMI VICTIMS

*The Tsunami Wave had taken the lives of 30950 in Sri Lanka. Another 392048 persons are affected by the Tsunami Waves.*

*The L.T.T.E. had declared the 31st Day after Tsunami as a time of mourning. In Hindu and Christian Temples Special Services were conducted in memory of those who perished. Services were conducted in Christian Churches in several parts in the North East Province.*

*However, schools, Govt. Officers and the Private sectors were allowed to carry their businesses as usual.*

Jaffna College Primary School Grade 1 Block declared opened by Bishop Jebanesan on 17.01.2005





*From Left to Right Rev. G. Nadarajah, Supervisor, Primary School, Mr. N. A. Vimalendran, Principal.*

## Dates of Remember

**January**

| | | |
|---|---|---|
| Friday 28 | :- | 150th Anniversary celebrations of Delft CSI Church. |
| Saturday 29 | :- | Opening of New block and Institute Day at Jaffna College Institute of Agriculture |

**February**

| | | |
|---|---|---|
| Friday | :- | 4th Opening of Renovated Parsonage Moolai. |
| Saturday | :- | 5th Opening of Daniel Poor Block – Jaffna College Under-graduate Department. |
| Monday | :- | 7th Opening of Computer Lacto Eluvaitivu. |
| Friday | :- | 11th Meeting of Uduvil Board. |
| Saturday | :- | 12th Dedication of St. James Church Bharathipuram and Dedication of St. Paul's Church Murukandy. |
| | | Laying of foundation stone for church of Christ the Living Savior Viswamadu. |
| Sunday | :- | 13th Laying of Foundation stone for Holy Trinity Church Salome Nagar. |
| | | Laying of foundation stone for counseling centre cum Auditorium Kilinochchi. |

## OBITUARY

### Mrs. Sellachy Pasupathy

*The death Occurred on Wednesday the 19th January of Mrs. Sellachy Pasupathy wife of Mr. Pasupathy of Karainagar are mother of Thevabalan, Thevamanohari Rev. Thevamithiran, Thevatheepan and Rev. Thevarajan.*

*The funeral took place on the following day at the residence of Rev. Thevamithiran at Inuvil. Rev. B. Jeyarajah conducted the funeral assisted by Revds. Thevarajan and Thevamithiran. Rev. A.V. Jesuthasan preached and Rev. A. Jeyakumaran gave the tribute. The remains live then removed to Karainagar cemetery for interment.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ecumenical Service for Tsunami victims

Clergy and laity of the various denominations in Jaffna assembled at St. Peters Methodist Church, Jaffna on Tuesday the 25th January to remember the souls that had gone beyond the veil because of the tsunami wave on the 26th December 2005.

The service was arranged by the Jaffna Christian Union. Rev. Dr. Dhyanchand Carr visiting Lecturer Christian Theological Seminary Maruthanamadam preached the sermon on the text St. John 9:9

---

## Listening

The only way to entertain some folks is to listen to them.

***K. Hubbard***

The surest rule (for excelling in conversation) is to listen much, speak little, and says nothing that you may be sorry for.

***La Rochefoucauld***

Lots of people talk to animals. Not that many listen though. That's the problem.

***A.A. Milne, Winnie the Pooh***

A good listener is not only popular everywhere, but after a while he gets to know something.

***Wilson Mizner***

You cannot truly listen to anyone and do anything else at the same time.

***M. Scott Peck***

None so deaf as those who won't hear.

***Proverb***

It takes two to speak the truth – one to speak, the other to hear.

***Henry David Thoreau***

The first duty of love is to listen.

***Paul Tillich***

Be a good listener. Your ears will never get you into trouble.

***Frank Tyger***

If a man were invited to a feast, and there being music at the feast, he should so listen to the music, that he did not mind his meat, you would say, Sure he is not hungry;.so when men are for jingling words, and like rather gallantry of speech than spirituality of matter, it is a sign that they have surfeited stomachs, and itching ears.

***Thomas Watson***

Helping others, that's the main thing. The only way for us to help ourselves is to help others and to listen to each other's stories.

***Eli Wiesel***

Everyone should be quick to listen, slow to speak.....

***The Bible, James 1:19***

His thoughts were slow,
His words were few and never formed to glisten.
But he was a joy to all his friends,
You should have heard him listen!

***Author unknown***

My wife said I never listen to her. At least I think that's what she said.

***Author unknown***

A wise old owl sat in an oak.
The longer he sat, the less he spoke.
The less he spoke, the more he heard.
Why can't we be like that wise old bird?

***Author unknown***

Blessed are those who listen, for they shall learn.

***Author unknown***

Women like silent men. They think they're listening.

***Marcel Archard***

The world is dying for want, not of good preaching, but of good hearing.

***George Dana Boardman***

What people really need is a good listening to.

***Mary Lou Casey***

The most important thing in communication is to hear what isn't being said.

***Peter F. Drucker***

We have two ears and one mouth so that we can listen twice as much as we speak.

***Epictetus***

The most effective remedy for self-love and self-absorption is the habit of humble listening.

***E. Herman***

## REMEMBERING MAHATMA GANDHI



On the 30th January Mahatma Gandhi the apostle of non-riolence was killed by Nathuram Kotse. The following is the editorial that appeared in the Morning Star a week after his assassination.

The brutal assassination of Mahatma Gandhi by a fanatic has removed with a tragic suddenness the greatest moral force of the century from the world. Pandit Nehru announced the Mahatma's death one week back with these words: "The light has gone out of our lives and there is darkness; the light, that has gone out was not an ordinary one, but would be seen in this country (India) and the world for ever". These words admirably reflect the reaction of the entire world at this shocking death. From the reports and messages of sorrow that have been pouring into India during the week, it is evident that this death has stirred and shocked the world as no other has for a long number of years. The reason is not far to seek. Gandhiji was not only the father of the Indian nation, not only the light of India, but the light of the whole world. Many figures have moved across the modern world stage with a more spectacular flourish and greater noise, but not one has wielded so momentous an influence in the history of our time. When some years ago he began to preach the method of non-violence as the way of life generally, people called him a mad idealist and laughed at him. Today he has shown to the world by his own life that there is no more powerful weapon than Ahimsa, and love. The "naked fakir" with peculiar political theories and a stranger programme of action was an object of contempt and laughter. People wondered how religion could be brought into politics. Today most of his fanciful and peculiar theories have proved to be sound and the world bows down to him as to no other man. Pandit Nehru says of him in his Autobiography: "He was a curious phenomeno – a person of the type of a medieval Catholic Saint, as Mr. Verrier Elwin has called him – and at the same time a practical leader with his pulse always on the Indian peasantry." Where can such a mixture be found: a saint and a politician, a visionary dreamer and a practical realist, a humble follower and a dynamic leader, a philosopher and a prophet?

What Gandhiji was to India needs no stressing here. He was the Father of the nation, the chief architect of the new Independent India, the mentor of not merely the leaders of the country, not merely the Congress, but the entire country and all its various peoples. Today, therefore, the pathetic despairing cry comes out of the depths of almost every one: "Hereafter to whom shall we turn for comfort, and guidance and leadership?" The most remarkable thing about him was his capacity to win over or disarm his opponents. People might have disagreed from him, but no one ever questioned the sincerity of his purpose . the purity of his motives. Those who disagreed from him were also convinced about the source from which Gandhiji derived his inspiration and soul force. Hence, they were willing to follow him always. Today, would he counsel his people to be disheartened at their being suddenly deprived of his leadership? When some years ago India was plunged in grief over the death of Rabindranath Tagore, Gandhiji said: "Gurudev's soul is immortal and he lives though dead..... His mortal remains are no more but his soul is immortal like ours.

..... Our true homage should be to maintain these institutions (of Tagore) which he is watching from wherever he may be." Today it is Gandhiji's turn to die, but he lives. In the words of the Dean of Canterbury, "The children of God never die". The Mahatma is dead, but his spirit will live always, beckoning his country and the world to live and die better, nobler. Nothing in his life became him better than the death of the martyr which fell to his lot.

---

## Silent Night.

1) Silent night, holy night
All is calm, all is bright
Round your virgin mother and child
Holy infant so tender and mild,
Sleep in heavenly peace.

2) Silent night, holy night
Shepherds quake at the sight
Glories stream from heaven afar
Heavenly hosts sing Alleluia;
Christ the Saviour is born!
Christ the Saviour is born!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயதாரகை 28.01.2005

**மிகப்பெரும் அதிர்ஷ்டம் ஒரு நல்ல கணவன்;**
**அதற்கடுத்தது நன்றியுள்ள வேலைக்காரன்**
**- செர்பியன் பழமொழி -**

## சுனாமிக்குப் பின்

2005 ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரங்களில் ஆழிப்பேரலைகள் அடித்து ஓய்ந்து விட்டன. கிழக்குக் கரையோரமாகவிருந்த திருச்சபைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின.

அந்த அலையின் அதிர்ச்சி தீருமுன் வன்னிப் பிரதேசத்திற் பிரச்சனை சூறாவளியாக எழுந்தது. கண்டிப்பும் அர்ப்பணிப்பும், நிறைந்த ஊழியர் குடும்பம் பெரும் அவதிக்குள்ளானது. சம்பவம் எப்படியோ நடந்து முடிந்து விட்டது. திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா பிரிந்த பொழுது எழுதிய வசனங்கள் மனங்கொள்ள வேண்டியன.

> "இனிச் செய்ய வேண்டியது
> என்ன என்பதை அவசரமும்
> ஆத்திரமும் இன்றி, தூண்டி
> விடுவோர், கண்டதைக்
> கிளறிப் பார்ப்போர், சந்தி சிரிக்க
> வைப்போர் என்போருக்கு
> இரையாகாமல், யோசித்துத்
> தீர்மானிக்க வேண்டும்"

சென்ற 18-ம் தேதி நமது ஊழியர் குடும்பம் ஒன்று பெரும் கஷ்டத்துக்குள்ளானபொழுது அக்குடும்பத்திற்கு ஆறுதலும், தேறுதலுமளித்த அன்பு உள்ளங்களை வாயார வாழ்த்துகின்றோம்.

கடல் அலைகள் பனை உயரத்திற்கு எழும்பி வரும். ஆனால் விரைவில் அடங்கித் திரும்பிப் போய் விடும். மனிதனுடைய வாழ்விலும் அலைகள் தோன்றுவதும் பின்னர் அமைதி ஏற்படுவதும் சகஜம். இதனாலேதான் நமது ஆண்டவர் கடல் அலைகளைக் கண்டு பயந்துபோய் இருந்த சீடர்களைப் பார்த்து "ஏன் பயப்பட்டீர்கள் என்று கூறினார். சங்கீதகாரன் கடலின் குமுறலை நீர் ஆளுகின்றீர். அதன் அலைகள் கெம்பீரித்து எழும்பொழுது நீர் அதனை அடக்கி விடுகிறீர்" என்று எழுதினார்.

இன்று வன்னிப் பிரதேசத்தில் எழுந்த கடல் அலை விரைவிலே அடங்கிப் போய்விடும். எல்லாருடைய மன்றாட்டுக்களையும் கேட்கின்ற ஆண்டவர் உள்ளங்களில் எழுகின்ற அலைகளை அடக்கிச் சமாதானத்தைக் கட்டளையிடுவார்.

வேதாகமத்தை புரட்டிப்பார்த்தால் மனிதனுடைய வாழ்வில் மாறாவும் ஏலிமும் மாறி மாறி வருவதைக் காண்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் மாறாவைக் கண்டதும் கடவுளைத் திட்டினார்கள். ஏலிமை அடைந்தவுடன் கடவுளைப் போற்றினார்கள். வாழ்க்கை முழுவதும் மாறா என்று நினைப்பவன் அறிவீனன். அப்படியே வாழ்க்கை முழுவதும் ஏலிம் என்று நினைப்பவனும் அறிவீனன்.

கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி எமக்குக் கொடுக்கப்பட்ட பணியிலே ஆவலாய்த் தொடர்வோமாக.

## சிரிக்க.

❖ *டாக்டர்கள் எல்லாம் மகாநாடு கூடினர். அதிற் கலந்து கொள்ள டாக்டர் பிராய்டுக்கும் (FREUD) அழைப்புக் கிட்டியது. பிரபல மிருக வைத்தியர் ஒருவரும் அம் மகாநாட்டில் கலந்து கொண்டார். பிராய்டின் பிரசங்கம் முடிந்ததும் "நீங்கள் ஒரு மிருக வைத்தியரா" எனப் பிராய்டைக் கேட்டார் மிருக வைத்தியர். "ஆமாம் நான் ஒரு மிருக வைத்தியர்தான், உமக்கு ஏதாவது நோய் உண்டோ?" என்றார் பிராய்டு.*

❖ *அடிக்கடி தன் மனைவியோடு மோதல் ஏற்பட்டு வந்த ஒருவன் தன் நண்பனைக் கேட்டான். "எவ்விதம் உங்களிருவருக்குமிடையே மோதல் ஏற்படாதிருக்கிறது?" என்று.*

*"அதுவா? மீனாவை நான் மணந்தபோது எங்களிடையே ஒரு ஒப்பந்தம். எல்லாப் பெரிய பிரச்சனைகளிலும் அவள் என் முடிவுப்படி நடக்க வேண்டியது. சிறு பிரச்சனைகளில் அவள் முடிவுப்படி நான் நடக்க வேண்டியது. இதனால்தான் எங்களிடையே சச்சரவே தோன்றுவதில்லை". என்றான் நண்பன்.*

*"சிறு பிரச்சனைகள் என்றால்?"*

*"குழந்தைகள் எந்தப் பள்ளியில் படிப்பது? மாதம் எத்தனை ரூபாய் மிச்சப் படுத்துவது? சினிமாவுக்குப் போவதா வேண்டாமா? இன்று என்ன சமையல் செய்வது? இவை போன்றவையே சிறு பிரச்சனைகள்."*

*"பெரிய பிரச்சனைகள் என்றால்" இந்தியாவுக்கு ஐ.நா பாதுகாப்பு சபையில் இடம் அளிப்பதா? வேண்டாமா? சந்திரலோகத்துக்கு மனிதன் போகமுடியுமா? முடியாதா? இவை போன்றவையே பெரிய பிரச்சனைகள்.*

**தியானம்**

# ஆண்டவரே என்னை மீட்டருளும்

- பேதுரு -

ஆண்டவரின் பிரியமான சீடர்களிற் பேதுரு முக்கியமானவர். ஆனால் அவரும் பெலவீனப் பாண்டம் எனக் காண்கிறோம். அவரிடத்திற் காணப்பட்ட மூன்று தன்மைகள் நம் வாழ்வில் தென் பூட்டுகின்றன.

தாம் செய்வதின்னதென்று அறியாது உணர்ச்சி வசப்பட்டுக் கருமமாற்றும் அவரது இயல்பைப் பலமுறை காண்கிறோம். அதனால் அவர் பலமுறை ஆண்டவரின் கடிந்து கொள்ளுதலுக்கும் அரவணைப்புக்கும் ஆளானார் எனக் காணலாம். இயேசு கடல்மேல் நடந்தபோது (மத். 14:28-33) தானும் அவருடன் நடக்கத் துணிந்தார். ஆண்டவர்மேல் அவருக்கிருந்த பூரண நம்பிக்கையையும் அவரைப்போலாகும் வாஞ்சையையும் அது காட்டுகிறது. நீர்மேல் சில அடிகள் வைத்தார். பயம் அவரை ஆட்கொள்ளவே அவர் அமிழ்ந்துபோக நேரிட்டது. "ஆண்டவரே என்னை மீட்டருளும்" எனக் கதறினார். ஆண்டவரும் கரங் கொடுத்தார். "ஏன் பயந்தாய்" எனக் கடிந்தார். காய்பா அரண்மனை வரை சென்ற பேதுரு, அங்கே என்ன நேரும் என்றறியாது உணர்ச்சி வேகத்தில் ஆண்டவருடன் கூடச் சென்ற பேதுரு, அவரை மறுதலித்து ஆண்டவரின் கடைக் கண்ணோக்கினால் மனங் கசந்து அழுது மனிதனானார். அவர் பலமுறை விழுபவரானார். அமிழும் வேளையில் ஆண்டவரே மீட்டருளும் எனக் கெஞ்சினார். அவர் மனதில் ஆண்டவர்பாலுள அன்பு எப்போதும் வெளிப்பட்டது.

உணர்ச்சிவசப்பட்டவராய்க் கருமமாற்றும்போது, அதன் பயனை உணராது செயலாற்றும்போது, அவர் தோல்வியும் துயரும் அடைந்தார். உணர்ச்சி வசப்பட்டு ஆண்டவரைப் பின்பற்ற விரும்பியவனை ஆண்டவர் தள்ளிவிடுகிறார். (லூக். 9:57-58) தீர்மானத்தோடு தன்னைத்தான் வெறுத்து, சிலுவையை எடுக்க ஆயத்தமாக அவரைப் பின்பற்றத் துணியும் பயமற்ற விசுவாசிகளை அவர் விரும்புகிறார். (மத். 16:24-25) ஆண்டவரைப் பின்பற்றுவது எவ்வளவு கடினம். கிறிஸ்துவின் வழியிலன்றி அவரைப் பின்பற்ற மனிதனால் முடியாது. கிறிஸ்தவ வாழ்க்கையில தோல்வி காண்பதற்குக் காரணம் தீர்மானமற்ற. கருத்தற்ற உணர்ச்சியின் பாற்பட்ட செயல்களாகும்.

தாம் விழுந்தபோதெல்லாம் ஆண்டவரை இறுகப் பற்றிக் கொள்ளப் பேதுரு தவறியதில்லை. அதனால் அவர் விழுந்த போதெல்லாம் உடனே எழும்பி விடக் கூடியதாயிருந்தது. அவரது விழுகைகளெல்லாம் அவரை ஆண்டவருடன் அதிகமாக ஒட்ட வைத்தன. விழுந்து எழும்பாத பரிசுத்தன் இல்லை. பரிசுத்தன் விழுந்ததும் ஆண்டவரின் கரத்தைப்பற்றி எழுந்து நடப்பவனாயிருப்பான். பேதுருவின் தோல்விகள் அவரை ஆண்டவரில் அதிகமாக அன்பு பாராட்ட உதவின.

நமது வாழ்க்கையிலுங்கூடப் பயத்தால், அவிசுவாசத்தால் தோல்விகளும், ஆபத்துகளும் குறுக்கிடுகின்றன. அவற்றிலிருந்து தப்பிக்கொள்ள, வெற்றியுடன் முன்னேறப் பேதுருவின் மன்றாட்டு நமக்கு எப்போதும் முன் மாதிரியானது. "ஆண்டவரே என்னை மீட்டருளும்."

கடல்கொந்தளித்தது. காற்றுப் பலமாயடித்தது. அமிழும் நிலையில் இருந்த கப்பலில் ஆண்டவர் ஏறினார். யாவும் அமைதியாயின. வாளியில் நிறையத் தண்ணீர்கொண்டு போகும்போது இலைகள் அல்லது மரக்கட்டையைப் போடுகிறோம். தண்ணீர் தளம்புவதில்லை. அபஜெயமும் ஆபத்தும் நம்மைச் சூழாதிருக்க ஆண்டவரின் கரத்தை இறுகப் பற்றுவோம். இதயமாகிய வாளியிற் சிலுவையாகிய மரக்கட்டையைப் போட்டுத் தளம்பாமல் - பயமற்று, விசுவாசத்தோடு - முன்னேறுவோம். சிலுவை நம் இதயத்திலிருக்கும்போது, ஆண்டவரிடம் நம் பிடி இருக்குமாகில் பயமேது? அமிழ்ந்து போகும் நிலையேது? "ஆண்டவரே என்னை மீட்டருளு"மென்று அவரைநோக்கிப் பார்த்து முன்னேறுவோமாக.

எழுதியது.
வண. – N. SUBRAMANIAM

**மறுமைப் பிரவேசம்**

## திருமதி செல்லாச்சி பசுபதி

காரைநகர், மருதடியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இணுவிலில் வசித்தவருமாகிய திருமதி செல்லாச்சி - பசுபதி அவர்கள் நேற்று (19-01-2005) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் பசுபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ரூத் ஏசாயா, திருமதி பாக்கியம் ஐயம்பிள்ளை, திருமதி நவமணி பேரம்பலம் ஆகியோரின் சகோதரியும் தேவபாலன் (பிபிலை), தேவறஞ்சன், வண. தேவராஜன் (ஊழியர், விசுவமடு தென்னிந்தியத் திருச்சபை), தேவமனோகரி, வண. தேவமித்திரன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), தேவதீபன் (துபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும் சோமாவதி (பிபிலை வைத்தியசாலை) தவமணிதேவி, விஜயலக்ஷமி, பரமநாதன் (தெல்லிப்பழை வைத்தியசாலை), இந்திரரூபி (ஆசிரியை, யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி), சுமதினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 20-01-2005 வியாழக்கிழமை வண. P. தேவமித்திரனின் வதிவிடமாகிய இணுவில் குருமனையில் நடைபெற்றது. வண. B. ஜெயராஜா ஆராதனையை நடத்தினார். வண. அ. ஜெயக்குமாரன் பாராட்டுரை வழங்கினார். வண. A. V. ஜேசுதாசன் அருளுரையாற்றினார்.

நல்லடக்கம் காரைநகர் சேமக்காலையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் ஆலயத்திற்கு வருவதில்லை?

நமது ஆலயங்களிலே கிறிஸ்தவ வழிபாடு நாளுக்கு நாள் குறைந்து வருவதை நாம் இன்று காண்கிறோம். வெறுமையான ஆசனங்களே அனேக ஆலயங்களிற் காட்சியளிக்கின்றன. ஆலய வழிபாட்டுக்குப் போவோர் வெகு சிலரே. இதன் காரணமென்ன? கிறிஸ்தவர் ஆலயத்துக்குப் போகாது இருப்பதேன்? ஆலய வழிபாட்டிலே அவர்கள் பங்குபெறாது விடுவது ஏன்? இக் கேள்விகள் மிகவும் முக்கியமானவை.

ஆலய வழிபாடு குறைந்து போவதற்கு அனேக காரணங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றுட் சில முக்கிய காரணங்களை மாத்திரம் நாம் இங்கு குறிப்பிடுவோம். இவைகளே நம்மில் அனேகர் அடிக்கடி கூறுகிற காரணங்களாகும்.

1. ஆலயத்துக்குப் போக வேண்டிய அவசியமில்லை, வீட்டிலிருந்தே நான் கடவுளை வழிபடலாம்.
2. ஆலயத்திற் பலதரப்பட்டவர்களும் வருகிறார்கள். அவர்கள் மத்தியில் நானும்போவது எனக்கு விருப்பமில்லை.
3. ஆலய ஆராதனை முறைமை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.
4. இன்றைய பிரசங்கியார் அவ்வளவு திறமையாகப் பேசக்கூடியவரல்ல.
5. போதகர் அனேக நாட்களாக என் வீட்டுக்கு வரவில்லை. ஆகவே, நானும் அங்கு போக வேண்டியதில்லை.

மேற்கூறிய காரணங்கள் நம்மில் அனேகர் அடிக்கடி கூறுங்காரணங்களாகும். ஆலயத்துக்குப் போகாத வேளைகளில் இக் காரணங்களில் ஏதோ ஒன்றைக்கூறி, நம்மை நாமே தேற்றிக் கொள்கிறோம்.

ஆனால், இவை உண்மையான காரணங்களா? ஆலயத்துக்குப் போகாதபடி நம்மைத் தடுப்பதற்கு இவை போதிய காரணங்களா?

1. வீட்டிலிருந்தே தனிமையாகக் கடவுளை வழிபட்டாற் போதும் என்கிறாய். ஆனால் கிறிஸ்தவ ஜீவியத்திலே, தனிச் சீவியத்துக்கும் தனி வணக்கத்துக்கும் போதிய இடமில்லை. தனி வணக்கம் நல்லது தான். ஆனால் அத் தனிவணக்கம் ஒருவனைக் கூட்டு வணக்கத்துக்குக் கொண்டு வராவிடில், அவனது தனி வணக்கம் பொய் வணக்கம். மற்றவர்களது சிந்தனையேதுமில்லாது நீ மாத்திரம் தனிமையாக மோட்சத்துட் பிரவேசிக்க முடியாது. தனிமையாக நீ மாத்திரமே மோட்சத்துட் பிரவேசிக்க முயன்றால், நீ வெளியேதான் நிற்கவேண்டி நேரிடும். மற்றவர்களையும் சேர்த்து மோட்சத்துட் பிரவேசிப்பதையே கிறிஸ்து மார்க்கம் போதிக்கிறது. பலர் கூடி, ஒரே சிந்தையோடும் ஒரே மனதோடும் ஆராதிக்கும் ஆராதனையே கிறிஸ்தவ வழிபாட்டின் அடிப்படையான உண்மை. கிறிஸ்தவ வழிபாடு, எப்பொழுதும் ஒரு கூட்டு வழிபாடு. "பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவே" என்று சொல்லுவதற்குக் கிறிஸ்து மார்க்கத்திலே இடமில்லை. கிறிஸ்து மார்க்கம் "கடவுளை எங்கள் பிதாவே" என்று அழைக்கும் மார்க்கம்.

   ஆகவே, வீட்டிலிருந்தே வழிபாடு செய்யும் கிறிஸ்தவனே, உனது வழிபாடு எவ்வளவு சுய நீதியுள்ளது. பொறுப்பற்றதுமாயிருக்கிறதென்பதை நீயே சிந்தித்துப் பார்.

2. ஆலயத்திற் பலதரப்பட்டவர்களும் வருகிறார்கள். அவர்கள் மத்தியில் நானும் போவது எனக்கு விருப்பமில்லை என்கிறாய். கிறிஸ்தவனே "பல தரப்பட்டவர்கள்" என்று நீ கூறுவது யாரை? உன்னிலும் பார்க்கச் சாதியிற் குறைந்தவர்களையா? வறுமையானவர்களையா? அந்தஸ்து இல்லாதவர்களையா? உன் சத்துராதியையா? இவர்கள் நிமித்தம் நீ ஆலயத்துக்குப் போகாது விடுவாயானால் நீ ஒரு கிறிஸ்தவனா என்பதை நீயே முதலில் உன்னைக் கேள். இந்த எண்ணம் உன்மனதிலே தோன்றும்போதே நீ ஒரு சுயநீதிக்காரனான பரிசேயன் ஆகிறாய். மற்றவர்களை நியாயந் தீர்ப்பதற்கு நீ யார்? உனக்குள் இருக்கும் அகங்காரம், பொறாமை, ஆணவம், பெருமை எவ்வளவு? பெருமையென்னும் கோபுரத்தின் உச்சிப்படியில் நீ இருக்கிறாய். தாழ்மையென்னும் அஸ்திபாரத்தின் அடிப்படையிலே உன் ஆண்டவர் இருக்கிறார். அங்கிருந்து நீ உன் ஆண்டவரை வணங்க முடியாது. ஆலயத்துக்குட் போ; அங்கு பலதரப்பட்டவர்களோடும் கலந்துகொள். தாழ்மை எது என்பதைக் கற்றுக்கொள். அதுவே உன் கிறிஸ்தவ சீவியத்தின் இலட்சணம்.

3. ஆலய ஆராதனை முறைமையைக் கண்டிக்கிறோம். ஆம், நமது ஆராதனை முறைகள் கண்டிக்கப்படவேண்டிய இடத்திலே கண்டிக்கப் படவேண்டியது அவசியமே. ஆனால் கடவுளுக்குத் திருப்தியாக உன் ஆராதனை முறை இருக்கவேண்டுமேயல்லாது, உனக்குத் திருப்தியாக அது அமையவேண்டியதில்லை. உனக்குத் திருப்தியான சில காரியங்களைச் செய்துவிட்டு, சந்தோஷத்தோடு வீடு திரும்புவது கிறிஸ்தவ வழிபாடல்ல. ஆலயத்துக்குப் போ! கடவுள் சந்நிதானத்திலே நில். அவரை வணங்கும் முறைமை உனக்குக் கூறப்படும். அங்கு போனால் மாத்திரமே ஆலய வழிபாடு உனக்குத் தெரியும்.

4. இன்றைய பிரசங்கியார் அவ்வளவு திறமையாகப் பேசக் கூடியவரல்ல; நல்ல பிரசங்கியார் வரும்போது போகலாம் என்கிறாய், ஆம், கிறிஸ்தவ வழிபாட்டிலே பிரசங்கம் முக்கியமானதே. ஆனால் பிரசங்கம் மாத்திரமே முக்கியமானதென எண்ணுதல் கூடாது. ஜெபம், பாட்டு, வேத வாசிப்பு, பிரசங்கம் யாவும் சேர்ந்தே கிறிஸ்தவ வழிபாடு ஆகிறது. ஆகவே வழிபாடு, பிரசங்கத்தில் மாத்திரமே அவ்வளவாகத் தங்கியிருக்கவில்லை. பிரசங்கியார் தமது செய்தியைப் போதிய செபத்தோடும், ஆயத்தத்தோடும் பிரசங்கிக்கவேண்டியது அவசியமே. அது அவரைப் பொறுத்தது. ஆனால், அவர் நிமித்தம் நீ ஆராதனைக்குப் போகாதிருப்பது தவறேயாகும்.

5. "போதகர் என் வீட்டுக்கு அனேக நாட்களாக வரவில்லை" என்கிறாய். நீ ஆலயத்துக்குப் போகாததற்கு முழுக் காரணமும் உன் போதகரே என்று சொல்கிறாய். ஆம், உன் வீட்டுக்குப் போதகர் வரவேண்டியது. அவரது கடமையே. அவரது கடமையை அவர் செய்யட்டும். ஆனால், அதன்நிமித்தம் உன் கடமையை நீ செய்ய மறப்பதேன்? நீ கிறிஸ்தவனாக இருப்பது உன் போதகருக்காகவல்ல; நீ கிறிஸ்தவனாக இருப்பதும், ஆலயத்துக்குப் போவதும் உனக்காக மாத்திரமே. உன் தவறுதலின் காரணத்தை மற்றவர்கள்மேல் சுமத்தாதே. போதகருக்காக ஒருபோதும் ஆலயத்துக்குப் போகாதே. ஆலயம் போதகருடையதல்ல. உனக்காக நீ போ. ஆலய வழிபாட்டிலே பங்குபெறு. அது உனக்கு ஆசீர்வாதமாகும்.

ஆலய வழிபாட்டிற் கலந்து கொள்ளாது தனிமையாக நின்று தத்தளிக்கும் சிநேகிதனே. உனது தத்தளிப்புக்குக் காரணமென்ன? அது உன் அறியாமையா? அல்லது உன் ஆணவமா? ஆண்டவர் பார்வையில் நேர்மையான பதிலைச் சொல்.

M.A.R.

# பேச்சைப்பற்றி இவர்கள்

மற்றவர்களைப்பற்றி உங்களிடம் பேசுபவன் வம்பளப்புக்காரன். தன்னைப் பற்றி உங்களிடம் பேசுகிறவன் 'அலுப்பு'. உங்களைப்பற்றி உங்களிடம் பேசுபவன் கலைஞன்.
**- ஜான் மார்லி -**

புரட்டுக்காரன் பேசுவதால் ஏற்படக்கூடிய தீமையைக் காட்டிலும் ஞானி வாயை மூடிக் கொண்டிருப்பதால் ஏற்படக்கூடிய தீமைகள் அதிகம்.
**- வில்லியம் லிகர்லி -**

விருந்துகளில் உங்களைப் பற்றியே ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? சிரமம் வேண்டாம். நீங்கள் புறப்பட்டுப் போனபின் அதுதானே நடக்கப் போகிறது.
**- பெஞ்சமின் ஃபிராங்ளின் -**

அற்பர்களுக்கிடையில் அறிஞர்கள் எடுபடாமற் போவதில் வியப்பு இல்லை. பறையின் ஓசையில் யாழின் ஓசை எடுபடாது. **- சா. அதி -**

கவனமாகக் கேட்பதும் மற்றவர்களுக்கு இசைவாகப் பேசுவதும் பேச்சுக்கலை.
**- யாரோ -**

ஒருவரது பேச்சு அவரது நடத்தையை எடுத்துக் காட்டும் ஒரு கோணமாகும்.
**- ஜேம்ஸ் பார்ஸன் -**

பேசுதல் வெள்ளி போன்றது என்றால் அமைதி பொன் போன்றது.
**- ஆங்கிலப் பழமொழி -**

எல்லா மனோ வியாதிகளுக்கும் மிகச் சிறந்த நாவு எழுத்துச் சிகிச்சை முறை, ஒன்றே ஒன்றுதான். அது 'பேசுவது' என்பதே. **- ரிச்சர்ட் கரீனா -**

குறைவாகச் சிந்திக்கிறவனே அதிகமாகப் பேசுகிறான்.**- மாண்டெஸ்க்யூ -**

தற்பெருமை அறிவைவிடப் பேச்சையே வளர்க்கிறது. **- லோ ரோச்சோ ஃபாகால்டு -**

எவரையும் இழுத்துப் பிடித்து நிறுத்தி உங்கள் பேச்சைக் கேட்கும்படி வற்புறுத்தாதீர்கள். அதைவிட உங்கள் வாயை மூடிக் கொள்வது நல்லது. **- செஸ்டர் ஃபீல்டு -**

அதிகமாகப் பேசும்போது நீ சிந்தனையைக் கொலை செய்கிறாய்.
**- கலீல் கிப்ரான் -**

எப்போதும் குடித்துக் கொண்டேயிருப்பவனுக்குச் சுவை தெரியாது; எப்போதும் பேசிக் கொண்டே இருப்பவன் சிந்திப்பதே இல்லை. **- பிரியான் -**

எப்போதும் பேசுபவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள்.**- ஷேக்ஸ்பியர் -**

உள்ளத்தைக் காட்டும் கண்ணாடி பேச்சு. **- செனேக்கா -**

பேச்சு வெள்ளி; மௌனம் தங்கம்; பேச்சு மனிதத் தன்மை; மௌனம் தெய்வீகத் தன்மை. **- ஜெர்மனிப் பழமொழி -**

தனது எண்ணங்களை மறைத்துக்கொள்ள மனிதனுக்கே உரிய இயல்புத் திறனே பேச்சு. **- அலெக்ஸாண்டர்-டி-டால்லேராண்ட் பெரிகோர்டு -**

மனுஷனுடைய உடலுக்குள் செல்வதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்துவதில்லை. மனுஷனுடைய வாயிலிருந்து வெளியே வருவதுதான் அவனைத் தீட்டுப்படுத்துகிறது
**- இயேசு கிறிஸ்து -**

ஒருவன் பேச்சாற்றல் உடையவனாகவும், சோர்வில்லாதவனாகவும், துணிவுள்ளவனாகவும் இருந்தால் அவனைச் சூழ்ச்சியால் யாரும் வெல்ல முடியாது. **- வள்ளுவர் -**

## வாசகர் கவனத்திற்கு

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். தரமானவைகள் பிரசுரிக்கப்படும்.
- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA.

# திட்டமிட்டுச் செயல்படுவோம்.

"அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும் முன அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து அவன் வீட்டிலே அவனோடு போசனம் பண்ணி, கர்த்தர் அவன் மேல் வரப்பண்ணின சகல தீங்கின் நிமித்தமும் அவனுக்காக அங்கலாய்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி அவர்கள் ஒவ்வொரு தங்கக் காசையும் அவர்கள் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்." - யோபு 42:11-12 -

இன்று உலகின் பார்வையிலும் கேள்வியிலும் இருப்பது ஆழிப்பேர் அலையால் ஏற்பட்ட அழிவும் அழுகையின் பேரொலியுமே! அழிவு என்ற சொல் சிறீலங்காவுக்குப் புதியது அல்ல. இருபது வருட இனப்பிரச்சனையினால் ஏற்பட்ட யுத்தம் தந்த பரிசு அழிவுதான். யுத்தத்தினால் வயது, பாகுபாடு இன்றி உயிர்கள் அழிந்தன. உடைமைகள் அழிந்தன. இன வேற்றுமையினால் இன உறவுகள் அழிந்தது. இவ் அழிவில் இருந்து நம் நாட்டை மீட்டு எடுக்க உலக நண்பர்கள் நமது நாட்டுக்கு வரவுமில்லை, அன்புக்கரம் தரவுமில்லை. உலக நண்பர்கள் பார்வையாளர்களாகவும் ஆயுத விற்பனை முகவர்களாகவுமே இருந்தனர். எங்கள் கண்ணீரை நாங்களே துடைத்தோம். இழப்பைச் சந்தித்த வடகீழ் மக்கள் தமக்குத் தாமே ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள். பிஞ்சுகளை இழந்தோம். மொட்டுக்கள் உதிர்ந்தது. கனிவதற்கு முன் காய்கள் பறிக்கப்பட்டது. குரலெடுத்துக் கூப்பிட்டோம். குறைபோக்க யார் வந்தார்கள்.

புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கம் கொண்டாடலு மாகிய கூக்குரல் ராமாவிலே கேட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது அவைகள் இல்லாதபடியினால் ஆறுதலடைந்திருக்கிறான்.
- மத் 2:17 -

26.12.2004 ஏற்பட்ட ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவு கண்டு பலம் வாய்ந்த உலக நண்பர்கள் எல்லோருமே விரைந்து ஓடுகின்றார்கள். சிறீலங்காவுக்கும் விரைந்து வந்திருக்கின்றார்கள். இவர்களுடைய வரவு புதிய சிறீலங்காவைக்கட்டி எழுப்பும் தன்மையுடையதாக இருக்க வேண்டும். என்பது ஏழைத் தொழிலாளிகளின் எதிர்பார்ப்பு அங்கலாய்ப்பு.

பின்பு நான் புதிய வானத்தையும்
புதிய பூமியையும் கண்டேன்
முந்திய வானமும் பூமியும் ஒழிந்து போயின
சமுத்திரமும் இல்லாமற் போயிற்று.

வெளி 21:1

இப்பிரதியை வாசிக்கும் சகோதரனே சகோதரியே, முந்திய யுத்தம் நிறைந்த வானமும் பூமியும் ஒழிந்துபோகும் என்ற விசுவாச ஜெபம் பெலமுள்ளதாக ஒலிக்கட்டும். புதிய வானமும் புதிய பூமியும் உருவாக உலக நண்பர்கள் வரவு உதவும். ஊக்கமாக ஜெபம் செய்வோமாக. இனிமேல் பயத்தை உண்டாக்கும் கடலாக நம் கடல் இருக்காது. அமைதியான கடலாகி ஆறுதலைத்தரும். பயம் நீங்கி நம் மீனவ உறவுகள் துணிவுகொண்டு நம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப இறை அருள் வேண்டி நிற்போமாக.

ஆழிப்பேரலையின் அழிவைச் சந்தித்த நம் உறவுகளுடன் உரையாடினேன். அவர்களுடையது கண்ணீர் அல்ல செந்நீர். அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. அவர்களுடன் இணைந்து அழத்தான் முடிந்தது

இயேசு கண்ணீர் விட்டார். - யோவா11:35 -

உறவுகளோடு உறவுகள் இணைந்து உள்ளத் துடிப்போடு அழும் கண்ணீர் எத்தனை பெலமான காரியத்தைச் செய்யும் என்பதை உணர்ந்தேன்.

ஆழிப் பேரலையின் பிடிக்கு அகப்படாமல் தப்பிய ஒருவர் தந்த செய்தி எனது பணிக்குத் துணை செய்தது.

"ஆழிப் பேரலையில் அகப்பட்டவர்களின் அவல ஒலி கேட்டு நாங்கள் தப்பினோம். எங்களைத் தப்பவைத்து விட்டுக் கரையில் இருந்தவர்கள் கரிய கடல் அலையிற் கரைந்து விட்டார்கள். அந்த அலை பேயலை, அப்படிச் சொல்லி அவரும் கரைந்துபோன உறவுகளுக்காக அழுதார்."

அவரிடம் ஒருசெய்தி சொல்ல வேண்டும் என்று ஏவப்பட்டேன்.

"சகோதரனே பே அலையில் கரைந்து போனவர்களின் ஓல ஒலி உங்களைப் பாதுகாத்தது என்பது உண்மை. பே, அலைக்கு கரைந்தவர்களின் எச்சங்கள் (மிகுதி) இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவுங்கள். ஆறுதல் சொல்லுங்கள். அவர்களுக்கு வரும் உதவிகளைத் தட்டிப் பறிக்கமாட்டீர்கள் என்பது எனது நம்பிக்கை" என்று சொல்லும் வாய்ப்பும் கிட்டியது.

கிறிஸ்துவுக்குள்ளாக வாழும் சகோதரனே சகோதரியே! எதிர்கொண்டுவரும் நாட்கள் நமக்கு நோன்புநாட்கள். இன்னாட்களில் நாம் நம்மைத் திட்டமிட்டு ஆழிப்பேரலையாம் பேயலைக்கு அகப்பட்டு அவதிப்படும் மக்களுக்கு உதவிட ஆயத்தப்படுவோம். திட்டமிடுவோம்.

உணர்ச்சி வசப்பட்டு எதையும் செய்யாமல் உள்ளத் தூய்மையோடும் பெலமான திட்டத்தோடும் செயல்பட இறை அருளுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக. இழப்புக்களில் இருப்பவர்களின் இழப்பை ஈடுசெய்வது தப்பி இருப்பவர்களுடைய பணி.

"அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும் முன அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து அவன் வீட்டிலே அவனோடு போசனம் பண்ணிக் கர்த்தர் அவன் மேல் வரப்பண்ணின சகல தீங்கின் நிமித்தமும் அவனுக்காக அங்கலாய்த்து, அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவர்கள் ஒவ்வொரு தங்கக் காசையும் அவர்கள் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்." யோபு 42:11 12

யோபுவுக்கு வாழ்வு தந்தது நண்பர்களும் சகோதர சகோதரிகளுமே. கர்த்தரின் செயற்பாட்டைச் செயற்படுத்தியவர்கள் இவர்களே. இஃதே போன்று நம் உறவுகளுக்கு உதவத் திட்டமிடுவோம். இயேசுவும் தன் மூன்றரை ஆண்டுப் பணிக்குத் திட்டமிட்டு நாற்பது நாட்களைத் தனிமையிற் செலவு செய்தார். மூன்று சோதனைகளைக் கடந்து

## IT IS NOT FINISHED

It is not finished, Lord.
There is not one thing done;
There is no battle of my life
That I have really won.

And now I come to tell Thee
How I fought to fail.
My human, all too human, tale
Of weakness and futility.

And yet there is a faith in me
That Thou wilt find in it
One word that Thou canst take
And make
The centre of a sentence
In Thy book of poetry.

I cannot read the writing of the years,
My eyes are full of tears,
It gets all blurred and won't make sense;
